அனைவருக்கும் காலை வணக்கம்

பொதுதனியார் துறை ஒத்துழைப்பு குறித்த இந்த தேசிய கருத்தரங்கில் கௌரவம் மிக்க பார்வையாளர்கள் மத்தியில் உரையாற்றுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

ஊலகின் இந்த பகுதிகளை சேர்ந்த நாடுகளில் பொருளாதார சமூக அபிவிருத்தியில் புதிய முக்கிய மாற்றங்கள் இடம்பெறுவது புலனாகியுள்ளது.முன்னர் அரசாங்கத்தின் செயற்பாடுகள் என கருதப்பட்டவைகளை தற்போது தனியார் துறையினர் மேற்கொள்ள தொடங்கியுள்ளனர்.

இந்த மாற்றத்தை உணர்ந்துள்ள, உலகம் முழுவதிலும் உள்ள அரசாங்கங்கள் காலநிலை பாதுகாப்பு,உட்கட்டமைப்பு

தேவைகள்,சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறை வளர்ச்சிக்கும்,கல்வி தொழில்நுட்ப மற்றும் இளைஞர் வேலைவாய்ப்பின்மைக்கும் தீர்வை காண்பதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச தனியார்துறை அமைப்புகளுடன் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளன.

புதுமையானதன்மை கொண்ட தனியார் துறை அரசதுறை ஒத்துழைப்பு மாதிரி என்பதுதந்திரோபாய சகாக்களின் சொத்துக்களையும் அனுபவங்களையும் உள்ளடக்கியுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளில் அது குறிப்பிடத்தக்க தாக்கத்தை செலுத்துவதற்காக அமெரிக்க அரசாங்கம் அதன் அபிவிருத்தி அமைப்பான சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்கமுகவர் அமைப்பின் மூலம் (யுஎஸ்எயிட்)நாடுகள்

இந்த மாதிரியை தழுவுவதற்கு உதவியுள்ளது.

பொதுச்சேவையினால் வழங்கப்படவேண்டிய பாரிய தேவைகளை பூர்த்திசெய்வதற்காக-உலகம் முழுவதிலும்உள்ள நாடுகள் பிபிபி எஸ் னை பயன்படுத்த தொடங்கியுள்ளன.பிபிஎஸ் பல வடிவங்கள் எடுக்கலாம் சாதாரண ஓப்பந்தங்கள் முதல் பாரிய ஓப்பந்தங்கள் வரை.

இலங்கையின் பல அரசாங்க அமைப்புகள் தங்கள் ஜனநாயக பொருளாதார சீர்திருத்த இலக்குகளை அடையச்செய்வதற்காக அமெரிக்கா அவர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றது.உதாரணத்திற்கு சமீபத்தில் நாங்கள் நிதியமைச்சின் பொதுநிதி திணைக்களம் பிபிபிஎஸ்

தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கும் பிபிபிஎஸ்தொடர்பில் தற்போது காணப்படும் சட்ட,ஓழுங்குபடுத்தும்,மற்றும் வர்த்தக சூழல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான திட்டத்தை உருவாக்கவும் உதவினோம்.இந்த திட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாங்கள் அரசாங்கம் பிபிபிஎஸ் கட்டமைப்பை உருவாக்க உதவுகின்றோம்.மேலும் நாங்கள் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உதவுகின்றோம்,உதாரணமாக பிபிபிஎஸ் பிரிவொன்றை உருவாக்குதல்,தேசிய பிபிபிஎஸ் குழுவை உருவாக்குதல், பிபிபிஎஸ் தொடர்பில் தேசிய கொள்கை மற்றும் தந்திரோபாயத்தை உருவாக்குதல், தற்போதைய சட்ட மற்றும் ஓழுங்கமைப்பு ஏற்பாடுகளில்

மாற்றங்களை ஏற்படுத்த உதவுதல் போன்றவை.

ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்கொண்ட ஆய்வுகளின் படி ஆசியபசுவிக் பிராந்தியத்திற்கு உள்கட்டமைப்பு அபிவிருத்திகளிற்காக 2010 முதல் 2020 வரை 8 டிரிலியன் அமெரிக்க டொலர்கள் அவசியம்.இந்த தேவையை பூர்த்தி செய்யும் ஆற்றல் பாரம்பரிய நிதி வழங்குநர்களிடம் இல்லை,இதன் காரணமாக பல நாடுகள் தனியார் துறை நிதிகளை திரட்ட முற்படுகின்றன அனேகமாக பிபிபிஎஸ் மூலமாக.

இலங்கை அரசாங்கம் பிபிபிஎஸ் னை ஸ்தாபிப்பதில் முன்னயில் காணப்படுகின்றது என தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்,அவர்கள் 1990 முதல் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்,அவர்கள் இவ்வாறன 70

ஓத்துழைப்புகளை ஏற்படுத்தியுள்ளது மின்சார துறை,தொலைத்தொடர்பு,ஐசிடி,துறைமுகங்கள் போன்ற துறைகளில் 6பில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு மேல் முதலீடுகளை பெற்றுள்ளது.இந்த நாடுகளில் திட்டமிடப்படும் பிபிபிஎஸ் அந்த துறைகளிற்கே உரிய சட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவது அந்த நாடுகளிற்கே உரிய குணாதிசயமாக காணப்படுகின்றது.ஆனால் இந்த பிபிபிஎஸ் செயற்பாடுகளிற்கு அப்பால் ஒவ்வொன்றும் தனித்தனியான விதி முறைகளின் கீழ் இயங்குகின்றன.

இலங்கை அரசாங்கம் சமீபத்தில் மெகாபொலிஸ் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளதன் மூலம் உள்கட்டமைப்பில் மேலும் பல பிபிபிஎஸ்களை உருவாக்க

தீர்மானித்துள்ளது. இந்த அமைச்சு மேற்கத்தைய மற்றும் அமெரிக்க மாதிரிகளை பயன்படுத்துகின்றது.அரசாங்கத்தின் தேவைகள் அவசியம் என நிலைவரும்போது முதலில் பிபிபிஎஸ் குறித்தே சிந்திக்கவேண்டும்.

இதற்கு மிகச்சிறந்த உதாரணம்கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியாகும்.இந்த திட்டம் இலங்கை அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும்மற்றும் தனியார் துறையினரின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றது.துறைமுகத்தின் செயற்பாட்டு திறனை அதிகரிப்பதற்கும் சர்வதே கப்பல்சரக்கு பரிமாற்றத்தில் அதன் பங்கை அதிகரிப்பதற்காகவும் இந்த அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது.-----------

ஆசியாவில் அனேகமான பிபிபிஎஸ்கள் எரிசக்தி துயில் காணப்படுகின்றன.இதற்கு அடுத்தபடியாக போக்குவரத்து நீர் மற்றும் வடிகால் துறைகள் காணப்படுகின்றன. பிபிபிஎஸ்கள் கல்வி துறையில் உதாரணமாக தொருழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி வழங்களில் இது பயன்படுத்தப்படுகின்றது.இதன் காரணமாக அது பொருளாதரா அபிவிருத்திக்கு மாத்திரமல்லசமூக அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றது,சீனா மற்றும் இந்தியா பாரிய பிபிபிஎஸ் சந்தைகளாக மாறியுள்ளன.உலகவங்கியின் புள்ளி விபரங்களின் படி இந்தியா 2000 முதல் 2013 வரையான காலப்பகுதியில் வு 600 பிபிபி திட்ட ஓப்பந்தங்களை வழங்கியுள்ளது. அனேகமாக போக்குவரத்து மற்றும் சக்தி துறைகளிலேயே இவை

வழங்கப்பட்டுள்ளன.இதேகாலப்பகுதியில் சீனா 800 திட்டங்களிற்கு அனுமதி வழங்கியுள்ளது. பிபிபிஎஸ

அதேவேளை பிபிபிஎஸ்களை ஏற்படுத்துவதில் அனேக திட்டமிடல்கள் இடம்பெறுகின்றன என்பதை நாங்கள் அறிந்துள்ளோம்,பிபிபிஎஸ் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்த நாடுகள் திட்டங்கள் எவ்வாறு திட்டமிடப்பட்ட எந்த அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டன நிதிகள் எவ்வாறு பெறப்பட்டன, என்பதை உங்களிற்கு தெரிவிக்கலாம்.தனியார் துறை முதலீட்டை ஏற்படுத்துவதற்கான சிறந்தசூழலை ஏற்படுத்துவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.இந்த சிறந்தசூழல் என்பது உறுதியான சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு கட்டமைப்புகள்,அர்ப்பணிப்புடனான பிபிபி

பிரிவு,- இது கொள்வனவு நடவடிக்கைகளில் வெளிப்படை தன்மை மற்றும் நேர்மையை உறுதிசெய்வதாக அமையவேண்டும் -போன்றவற்றை உள்ளடக்கியதாக காணப்படும்

பிபிபிஎஸ்னை ஊக்குவிப்பதே அமெரிக்காவின் முக்கிய நிகழ்ச்சி நிரல்இதனுடன் தொடர்புபட்டவர்களின் திட்டங்களிற்கு உதவுவதில் எங்களிற்கு சிறந்த அனுபவம் உள்ளது.உலகில் பல நாடுகளில் பிபிபி திட்டங்களை திட்டமிட்டு ஆதரித்த உறுதியான அனுபவங்கள் எங்களிற்கு உள்ளது.

இலங்கையில் அமெரிக்க அரசாங்கம் இதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதற்குஅரசாங்கத்திற்கு நிபுணர்கள் தலைமையிலான திட்டங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் உதவியுள்ளது உதாரணத்திற்கு

இலத்திரனியல் அரச கொள்வனவு திட்டத்தை குறிப்பிடலாம் இதுசெலவு குறைந்தது, வலுத்திறன் மிக்கது வசதியானது.மேலும் இது அரசாங்கத்தின் செயற்பாடுகளை நேர்மையானதாக வெளிப்படை தன்மை மிக்கதாக மாற்றும்.

அரசாங்க செயற்பாடுகளை வெளிப்படையானதாக பொறுப்புக்கூறும் தன்மை மிக்கதாக மாற்றுவதற்கு உதவக்கூடியதேசிய இலத்திரனியல் அரசாங்க அமைப்பை கொள்வனவு செய்வதற்குபிபிபி யை பயன்படுத்தலாம், அது ஆட்சி முறையை மேலும்பலப்படுத்தும்.பிபிபி எஸ்களிற்கு டிஎப்போதும் நவீனமயப்படுத்துவதும் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் அவசியம்,இவற்றிற்கு முதலீடும் முலதனமும் அவசியம்.இதன்காரணமாக தனியார் துறையினரை ஈஆட்சி அல்லது

ஐசிடி சேவையை அரசாங்கத்தின் சார்பில் வழங்கச்செய்வது இருதரப்பிற்கும் நன்மையளிக்கும்.

யுஎஸ்எயிட் நிதியமைச்சின் பொதுநிதிப்பிரிவு ஆகியவற்றின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் இன்றைய தேசிய மாநாடு பிபிபிஎஸ்ஸினை சர்வதே தராதரத்திற்கு ஏற்ப,உருவாக்குவதற்கான தந்திரோபாயங்கள் தொழில்நுட்பங்கள்குறித்து ஆராய்வதற்கான வாய்ப்பை அரசாங்க அதிகாரிகளிற்கு உருவாக்குகின்றது.இதனுடன் வெளிப்படைதன்மை,பொதுநிதி முகாமைத்துவம்,பொதுமக்கள் பங்களிப்பு தகவல் பெறுதல் ஆகிய தொடர்புபட்டுள்ளன.

பிபிபி மாதிரியை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைமக்களிற்கும் அரசாங்கத்திற்கும்உதவுவது குறித்து அமெரிக்க அரசாங்கம் மகிழ்ச்சிகொண்டுள்ளது.கடந்த60 வருடங்களாக நாங்கள் செயற்பட்டுள்ளது போன்று உங்கள் வாழ்க்கையை எதிர்காலத்திற்கு உதவுவதற்கு மனிதாபிமான அபிவிருத்தியை நாங்கள் தொடர்ந்தும் வழங்குவோம்,இன்று வரை அமெரிக்க அரசாங்கம் 2 பில்லியன் டொலர்கள் வரை பல அபிவிருத்திதிட்டங்களிற்கு வழங்கியுள்ளது.விவசாயம், கல்வி, சுகாதாரம் வர்த்தகம் நல்லாட்சி மனிதாபிமான உதவி ஆகிய பல துறைகளில் இவற்றை வழங்கியுள்ளது.

பொது அரசதுறை ஒத்துழைப்பு மற்றும் இலத்திரனியல் அரசகொள்வனவு துறைகளில் பயிற்சியையும் செயற்திறன் வளர்ச்சியையும் வழங்குவதன் மூலம் நாங்கள் வலுவான பிபிபி சூழல் ஏற்பட உதவவோம்,இது எதிர்காலத்தில் பிபிஎஸ்களில் தனியார் துறையினரின் முதலீட்டை ஊக்குவிக்கும்.

எனது உரையை பூர்த்திசெய்யும் இந்த தருவாயில் நான் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தமைக்க்கா ஏற்பாட்டாளர்களிற்கும்,தங்கள் பல பணிகளிற்கு மத்தியிலும் இதில் கலந்துகொண்டவர்களிற்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்,சமீபத்திய அறிவுகள் அனுபவங்கள் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்வதற்கு கிடைத்த சிறந்த வாய்ப்பிது.

இந்த மாநாடு பயனள்ளதாகவும் அறிவூட்டுவதாகவும் அமையும் என நான் எதிர்பார்க்கின்றேன்,இலங்கையில் பிபிபி எஸ்ஸினை ஊக்குவிப்பதற்கானஎதிர்கால கலந்துரையாடல்களிலும் கலந்துகொள்வது குறித்து ஆர்வமாகவுள்ளேன்

நன்றி